**கவனிக்க.-** *09.05.2014 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியவை பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1863 - 2014 මැයි මස 16 වැනි සිකුරාදා - 2014.05.16

*1863 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 670 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 672 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 676 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 671 | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க .-** அரசியலமைப்புக்கான இருபத்திரண்டாவது திருத்தச் சட்டமூலம் 2014, ஏப்பிறல் 25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2014, யூன் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, மே மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**காணி, காணி அபிவிருத்தி அமைச்சு**

இலங்கை நில அளவைத் திணைக்களம்

**விலைமனுக் கோரல்**

*பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ளல் - 2014*

*கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நிலஅளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகங்களின் அலுவலகங்களில் மனுக்கோரல்கள் 2014.06.04 ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனுக் கோரல்கள் பி. ப. 2.05 மணிக்கு திறக்கப்படும். மனுக்கோரல் விண்ணப்பப்படிவங்களையும், குறித்த விபரங்களையும் உரிய மாகாண நிலஅளவையாளர் நாயகத்தின் அலுவலகத்திலும் மற்றும் மாவட்ட நிலஅளவை அலுவலகத்திலும் மீளப்பெறமுடியாத கொடுப்பனவாக 250 ரூபாவை (இருநூற்றைம்பது ரூபா) செலுத்தி 2014.06.03 ஆந் திகதியன்று பி. ப. 12.00 மணி வரை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

**அட்டவணை**

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச நில அளவை அலுவலகம் | விண்ணப்பப்படிவங்களும் ஏனைய விபரங்களும் கிடைக்கும் நிலையங்கள் | கேள்விமனு ஒப்படைத்தல் | அருகில் உள்ள நகரம் | கட்டிடம் தேவைப்படும் திகதி |
|---|---|---|---|---|---|---|
| மேல் மாகாணம் | கம்பஹா | கட்டான - நீர்கொழும்பு (பிம்சவிய) | மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம் (மேல் மாகாணம்), மாவட்ட நில அளவை அலுவலகம், கொழும்பு | மாகாண நில அளவையாளர் நாயகம் (மேல் மாகாணம்), நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், கிருல வீதி, கொழும்பு 5 | கட்டான அல்லது சுற்றுப் புறத்தில் | 2014.06.15 |
| வடமேல் மாகாணம் | குருநாகல் | மல்லவபிட்டிய (பிம்சவிய) | மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம் (வடமேல் மாகாணம்), மாவட்ட நில அளவை அலுவலகம், குருநாகல் | மாகாண நில அளவையாளர் நாயகம் (வடமேல் மாகாணம்), மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், குருநாகல் | மல்லவ பிட்டிய அல்லது சுற்றுப் புறத்தில் | 2014.06.15 |

*முத்திரையிடப்பட்ட தபாலுறையில் தேவையான சகல விபரங்களுடனான மனுக்கோரல்கள் அது அடங்கிய தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "பிரதேச நிலஅளவை அலுவலகங்களை வாடகைக்கு பெறுதல் (இடத்தின் பெயர்)" எனக் குறிப்பிட்டு 2014.06.04 ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாக கையளிக்கப்படவோ வேண்டும்.*

*நில அளவையாளர் நாயகம்.*

*நில அளவையாளர் நாயகம் அலுவலகம்,*
*கிருல வீதி,*
*கொழும்பு 5,*
*2014, ஏப்பிறல் 30.*

*5-434*

---

**இலங்கை புகையிரத சேவைகள்**

பெறுகை அறிவித்தல்

*இலங்கை புகையிரத சேவைக்கு 1 மெ/தொ புளொக் டின்களை கொள்வனவு செய்வதற்கான விலைமனு - கொள்வனவு இல. SRS/ F 7127*

*1 மெ./தொ. புளொக் டப்பாக்களை (Block Tin) கொள்வனவு செய்வதற்காக உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்கள் ஆகியோரிடமிருந்து இலங்கை, கொழும்பு, தபால் பெட்டி இல. 355, ஓல்கட் மாவத்தை, புகையிரத தலைமையகம், இலங்கைப் புகையிரத சேவையின் கேள்விக்குழு, திணைக்கள தவிசாளர் முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கோருகிறார்.*

உற்பத்தியாளர்கள் தமது விலைமனுக்களை நேரடியாகவோ அல்லது அற்றோணி அதிகாரம்பெற்ற அல்லது அதிகாரம்பெற்ற முகவர்கள் மூலமோ தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம்.

2. விலைமனுக்கள் 28.05.2014 (இலங்கை நேரப்படி) பி. ப. 2.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

3. மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக 2,500 ரூபா மாத்திரம் அல்லது இலகுவாக மாற்றக்கூடிய நாணயத்தில் பணத்திற்குச் சமமான தொகையை 2014.05.27 ஆந் திகதி இலங்கை நேரப்படி பி. ப. 3.00 மணிவரை இலங்கை, கொழும்பு 10, ஓல்கட் மாவத்தை, புகையிரதக் களஞ்சியசாலை அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து அல்லது வெளிநாட்டிலுள்ள இலங்கை தூதுவராலயங்களிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. விலைமனுக்கள் அவைகள் முடியவுடன் உடனடியாகவே இலங்கை, கொழும்பு 10, ஓல்கொட் மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகள் பொது முகாமையாளர் அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம்பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

5. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் இட்டோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கலாம் :-

தவிசாளர்,
திணைக்கள கேள்விக் குழு,
இலங்கை புகையிரத சேவைகள்,
புகையிரத தலைமையகம்,
ஓல்கொட் மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.

6. விலைமனு ஆவணங்கள் இலங்கை, கொழும்பு 10, ஓல்கொட் மாவத்தை, புகையிரதக் களஞ்சியசாலை அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

7. மேலதிக விபரங்களுக்காக தொடர்புகொள்ள வேண்டிய முகவரி.- புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகர், புகையிரத களஞ்சியசாலைத் திணைக்களம், த. பெ. இல. 1347, ஓல்கொட் மாவத்தை, கொழும்பு, இலங்கை. தொலைபேசி இல. : 94(11)2438078 அல்லது 94(11)2436818 ; தொலைநகல் இல. : 94(11)2432044. ஈ-மெயில் : srs.slr.@gmail.com, இணையம் : www.railway.gov.lk. அ. இலக்கம் : SRS/F.7127.

தவிசாளர்,
திணைக்கள கேள்விக் குழு,
இலங்கை புகையிரத சேவைகள்.

5-492

---

## ஆய விற்பனையும் குத்தகையும்

### சிலாபம் பிரதேச செயலகப் பிரிவில் கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை - 2014/2015

2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 1 ஆந் திகதி முதல் 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கு இத்துடன் இணைத்துள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகள் சில்லறையாக விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப் படும்.

2. எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவத்தில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணத்தைச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்பட வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாக பொறியிடப்பட்ட கடித உறையில் இட்டு அதன் இடதுபக்கத்தில் தவறணையின் பெயரும், இலக்கமும் பின்வருமாறு:

"......................................... இலக்கமுள்ள ......................................... கள்ளுத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்"

எனக் குறிப்பிட்டு 2014.05.20 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு முன் சிலாபம் பிரதேச செயலகத்திலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுதல் வேண்டும். அல்லது மேற்குறித்த திகதி, நேரத்திற்கு முன் சிலாபம் பிரதேச செயலகத்திற்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982, ஒகத்து 20 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய செயல்படுதல் வேண்டும்.

5. 2014.05.20 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே சகல கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அவ்வேளை கேள்விப்பத்திர கோரிக்கைதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் இச்செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. மேற்குறிப்பிட்ட தினத்தில் விற்பனையாகாமல் தவறணைகள் ஏதுமிருப்பின் இவற்றுக்கான மீள் விற்பனை 2014.06.04 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைய நடைபெறும்.

7. இது தொடர்பாக மேலதிக விபரங்கள் சிலாபம் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி 032-2223205)

யூ. எஸ். என். பிரனாந்து,
பிரதேச செயலாளர்,
சிலாபம்.

பிரதேச செயலகம்,
சிலாபம்,
2014, ஏப்பிறல் 24.

**அட்டவணை**

| இல. | பகுதி | கிராமம் | தவறணை கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப் பத்திர வைப்புப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 1. | சிலாபம் ந. வட் இலக்கம் 2 | ஈச்சம்பிடிய | 2014.05.20 மு. ப. 10.30 | 2,000 |
| 2. | சிலாபம் ந. வட் இலக்கம் 3 | பிரிவினுள் வேறொரு இடம் தேவைப்பட்டுள்ளது | 2014.05.20 மு.ப. 10.30 | 1,000 |
| 3. | பிடிகல கோரலே | ஒலிதலுவ | 2014.05.20 மு. ப. 10.30 | 250 |

5-391

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : நுவரஎலிய எனர்ஜி டிவலொப்பர்ஸ் (பீவீரீ) எல்ரீடி
பதிவு இலக்கம் : பீவீ 98222
பதிவு முகவரி : கரகஸ்தென்ன, நாரம்பனாவ

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி.

5-438

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச்செய்தல்

இல. 170/6, கங்கானி உயன, மாதொல, அவிசாவளை என்ற விலாசத்தில் வசிக்கும் சாந்தி பிரதீப் குலரத்ன ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு மக்களுக்கு அறிவித்துக்கொள்வதாவது, சட்டத்தரணி ஜீ. ரதம்பொல கமகே என்பவர் ஊடாக செய்துகொண்ட அற்றோணி அறிவித்தல் மூலம் மேற்படி விலாசத்தைச் சேர்ந்த உந்துகொடகே துஷாரி சஞ்சீவனீ பெரேரா என்பவருக்கு உரிமை அளிக்கப்பட்டிருந்தது. அந்த உரிமையையும் அற்றோணி தத்துவத்தையும் இன்று முதல் இரத்துச் செய்துகொள்வதாக அறிவித்துக்கொள்கின்றேன்.

சாந்தி பிரதீப் குலரத்ன.

5-552

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ் மோகன்-டேவிஸ் புரொபர்ட்டீஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தின் பெயர் 2014, மாச்சு 26 ஆந் திகதி தொடக்கம் மோகன்-

டேவிஸ் கன்சல்டன்சி (பிறைவேட்) லிமிட்டெட் என்று மாற்றப் பட்டுள்ளது என்று அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது :-

நிறுவனத்தின் முன்னைய பெயர் : மோகன்-டேவிஸ் புறொபர்ட்டீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
நிறுவனத்தின் புதிய பெயர் : மோகன்-டேவிஸ் கன்சல்டன்சி (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 78618
பதிவுசெய்யப்பட்ட முகவரி : செக்ரடேரியல் ஹவுஸ் (பிறைவேட்) லிமிட்டெட், கம்பனிச் செயலாளர்கள், இல. 10, ஹவ்லொக் பிளேஸ், கொழும்பு 5

செக்ரடேரியல் ஹவுஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 10, ஹவ்லொக் பிளேஸ்,
கொழும்பு 5.

5-420

---

## அறிவித்தல்

ஹோட்டல் நல்லூர் லிமிட்டெட்

கம்பனியின் பதிவு இல. பீபி 3815

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 320(1) ஆம் பிரிவின்கீழ் விசேட தீர்மானம் பற்றி பின்வருமாறு அறிவிக்கப் படுகின்றது :-

2014 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 25 ஆந் திகதி நிறைவேற்றப்பட்ட கம்பனி கடன் கொடுத்தோர் தன்னிச்சையான ஒடுக்குதல் பற்றிய விசேட தீர்மானம்-

மேற்படி கம்பனியானது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 333 ஆம் பிரிவின்கீழாக கடன் கொடுத்தோரின் தன்னிச்சையான ஒடுக்குதல் மூலம் கலைக்கப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஹோட்டல் நல்லூர் லிமிட்டெட்.

5-424/2

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : அகாவுட் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 97346
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2014.03.03
பதிவு முகவரி : இல. 841/3, சியம்பலாபே தோட்டம், தெல்கொட

பணிப்பாளர்.

5-417

---

## அறிவித்தல்

ஹோட்டல் நல்லூர் லிமிட்டெட்
(கடன் கொடுத்தோர் தன்னிச்சையான ஒடுக்குதல்)

கம்பனியின் பதிவு இல. பீபி 3815

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 346(1) ஆம் பிரிவின்கீழ் இணை கலைப்பாளர்கள் பற்றி பின்வருமாறு அறிவிக்கப் படுகின்றது :-

கொழும்பு 3, சாந்த மைக்கல் வீதி, இல. 28, இலங்கை வங்கி மேர்ச்சண்ட் டவர்ஸ் இல் அமைந்துள்ள ஹோட்டல் நல்லூர் லிமிட்டெட் எனும் கம்பனியின் கடன் கொடுத்தோரின் 2014, சித்திரை 25 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக மேற்படி கம்பனியின் கலைப்பாளராக இல. 2, காசல் ஒழுங்கை, கொழும்பு 4, 4 ஆம் மாடியில் அமைந்துள்ள எஸ்ஜேஎம்எஸ் அசோசியேட்ஸ் ஐச் சேர்ந்த பீ. ஈ. ஏ. ஜயவிக்கிரம மற்றும் ஜீ. ஜே. டேவிட் ஆகிய நாங்கள் நியமிக்கப்பட்டுள்ளோம் என சகலருக்கும் அறியத்தருகிறோம்.

பீ. ஈ. ஏ. ஜயவிக்கிரம, ஜீ. ஜே. டேவிட்,
இணை கலைப்பாளர்,
ஹோட்டல் நல்லூர் லிமிட்டெட்.

மே./பா. எஸ்ஜேஎம்எஸ் அசோசியேட்ஸ்,
ரிஸ்ரக்சர் அன்ட் கோர்ப்பரேட் ரிகவரி,
லெவல் 4, இல. 2, காசல் லேன்,
கொழும்பு 4,
2014, ஏப்பிறல் 29.

5-424/1

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : பியோன்ஜஸ்ட்வர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 97480
கூட்டிணைப்புத் திகதி : 2014, மார்ச்சு 26
பதிவு முகவரி : இல. 42, 2/2, ருத்திரா மாவத்தை, கொழும்பு 6

கம்பனிப் பணிப்பாளர்.

5-416

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ஹர்ஷன இன்ஜினியரிங் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

*பதிவு இலக்கம் :* பீவீ 98216
*கூட்டிணைப்புத் திகதி :* 22.04.2014
*பதிவு முகவரி :* இல. 1/18, திக்கந்த வீதி, வல்கம்முல்ல

கம்பனிப் பணிப்பாளர்.

5-400

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின் வரும் கம்பனி நிறுவப்பட்டது பற்றி இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர் :* ஸ்டெபல் ஹோல்டிங்ஸ் (தனியார்) வரையறுக்கப்பட்டது
*பதிவிலக்கம் :* பீவீ 96103
*அலுவலக முகவரி :* இல. 35, அரநாயக்க வீதி, மாவனெல்லை
*நிறுவப்பட்ட திகதி :* 13.12.2013

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி.

5-398

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின் வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர் :* செலிங்கோ ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டெட்
*பதிவிலக்கம் :* பீபி 5184
*கூட்டிணைப்புத் திகதி :* 22.04.2014
*பதிவு முகவரி :* சிலிங்கோ ஹவுஸ், 3 ஆவது மாடி, இல. 69, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 1

5-393

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின் வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர் :* ஐகொனிக் சிலோன் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம் :* பீவீ 98008
*கூட்டிணைப்புத் திகதி :* 04.04.2014
*பதிவு முகவரி :* இல. 89/4, இல்லவதுர, கம்பளை

பணிப்பாளர்.

5-344

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(5) ஆம் பிரிவிற்கமைய கம்பனியின் அந்தஸ்த்தில் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவான பெயர் மாற்றம் பற்றி பகிரங்கமாக அறிவிக்கப்படு கின்றது :-

பங்குகளைப் பட்டியலிடுவதற்கு கொழும்பு பங்குப் பரிவர்த்தனை யிலிருந்து ஊர்ஜிதக் கடிதம் கிடைத்திருப்பதாகவும், கம்பனியின் அந்தஸ்தை ஒரு வரையறுக்கப்பட்ட கம்பனி என்ற நிலையிலிருந்து ஒரு பொது வரையறுக்கப்பட்ட கம்பனி என்ற நிலைக்கு மாற்ற 2014, ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதிய விசேட தீர்மானத்தின் மூலம் பங்குதாரர்கள் அங்கீகாரம் வழங்கியிருப்பதாலும், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(3) ஆம் பிரிவிற்கமைய "லிமிட்டெட்" என்ற சொல்லுக்குப் பதிலாக "பீஎல்சீ" என்பதைச் சேர்ப்பதன் மூலம் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க கம்பனியின் பெயரை மாற்ற தீர்மானித் துள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் விபரங்கள் பின்வருமாறு :-

*கம்பனியின் பெயர் (மாற்றத்திற்கு முன்) :* அலுமெக்ஸ் லிமிட்டெட்
*கம்பனியின் பெயர் (மாற்றத்திற்கு பின்) :* அலுமெக்ஸ் பீஎல்சீ
*கம்பனியின் பதிவிலக்கம் :* பீவீ 539 பீபி
*பதிவுசெய்யப்பட்ட முகவரி :* சப்புகஸ்கந்த, மாகொல

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஹேலீஸ் குரூப் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

இல. 400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10,
2014, ஏப்பிறல் 30.

5-491

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர் :* கயுமு லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம் :* பீவீ 98179
*திகதி :* 22.04.2014
*பதிவுசெய்யப்பட்ட விலாசம் :* மெக்லரன்ஸ் கட்டிடம், 2 ஆம் மாடி, இல. 123, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 4
*கம்பனிச் செயலாளர் :* சீ. மெத்திவ் மற்றும் கம் (பிறைவேட்) கம்பனி, எஸ். ஈ. சி./ (2) 2013/311

5-509

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-*

*நிறுவனம்* : ஜீ. ஏ. பீ. டுவர்ஸ் அன்ட் ஏஜன்சீஸ் (பீவீரீ) எல்ரீடி
*விலாசம்* : வடத்தர, வெயாங்கொடை
*நிறுவன பதிவிலக்கம்* : பீவீ 95953
*பதிவுசெய்யப்பட்ட திகதி* : 2013.12.12

முகாமையாளர்.

5-504

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ் டெடாடெக் (பிறைவேட்) லிமிட்டெட் என்ற கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பாக பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : டெடாடெக் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 6358
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரி* : இல. 85, பிறேபுறுக் பிளேஸ், கொழும்பு
*கம்பனியின் புதிய பெயர்* : மெட்றோபொலிடன் பொடோஹப் (பிறைவேட்) லிமிட்டெட்

மெட்றோபொலிடன் பொடோஹப்
(பிறைவேட்) லிமிட்டெட்டின் கட்டளைப்படி,

பி. டபிள்யூ. செக்ரடேரியல் (பீவீரீ) எல்ரீடி,
கம்பனிச் செயலாளர்கள்.

5-524

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி பொறுப்பு வாய்ந்த கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : பைன் லைன் ஐ என்ட் ஈ (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 97912
*கூட்டிணைப்புத் திகதி* : 31.03.2014
*பதிவு முகவரி* : இல. யூஜீ 117-121, பீப்பல் பார்க், கொம்ப்லெக்ஸ், புறக்கோட்டை, கொழும்பு 11

கம்பனிப் பணிப்பாளர்.

5-523

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : கிங்டெம் பிசினெஸ் சொலுயுசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 98122
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2014, ஏப்பிறல் 10
*பதிவு முகவரி* : இல. 17, மன்றேசா வீதி, மட்டக்களப்பு

ஜோசப் செக்ரடேரியல் சேர்விசெஸ்
(பீவீரீ) எல்ரீடி,
கம்பனிச் செயலாளர்கள்.

5-525/ 1

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : பியோரென்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 97220
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 24.02.2014
*பதிவு முகவரி* : இல. 108, விவேகானந்த மேடு, கொழும்பு 13

ஜோசப் செக்ரடேரியல் சேர்விசெஸ்
(பீவீரீ) எல்ரீடி,
கம்பனிச் செயலாளர்கள்.

5-525/ 2

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : கைரோஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 97215
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 24.02.2014
*பதிவு முகவரி* : இல. 108, விவேகானந்த மேடு, கொழும்பு 13

ஜோசப் செக்ரடேரியல் சேர்விசெஸ்
(பீவீரீ) எல்ரீடி,
கம்பனிச் செயலாளர்கள்.

5-525/ 3

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 324(3) ஆம், 334(2) ஆம் பிரிவிற்கு அமைவாக கடன் கொடுத்தோர் கூட்ட அறிவித்தல்

*சிலோன் ரீ ஹாடன்ஸ் லிமிட்டெட்*

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 324(3) ஆம், 334(2) ஆம் பிரிவின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட கம்பனிக்கு கடன் கொடுத்தோருக்கான கூட்டம் ஒன்று எதிர்வரும் 2014, யூன் மாதம்*

13 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு கொழும்பு 5, நாவல வீதி, நாரஹேன் பிட்டி, இலக்கம் 153 இல் நடைபெறுமென இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது. (கூட்டத்தில் பங்குபற்றுவதற்கான அதிகாரப் பத்திரத்தினை இக்கம்பனிக்கு கடன் கொடுத்தோர் கூட்டம் கூடுவதற்கு முன்பாக கொழும்பு 5, நாவல வீதி, நாரஹேன்பிட்டி, இலக்கம் 153 இல் அமைந்துள்ள மேற்படி கம்பனியின் அலுவலகத்தில், யூன் மாதம் 11 ஆந் திகதி மாலை 3 மணிக்கோ அதற்கு முன்பாகவோ தாக்கல் செய்ய வேண்டும்.)

கடன் கொடுத்தவர்கள் கூட்டத்தில் வாக்களிக்க விரும்பின் தமது கடன் விபரங்களை முன்கூட்டியே மேற்படி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். மேலும் முன்னிலைப்படுத்தப்பட்ட கடன் கொடுத்தோர் (தமது பொறுப்புப் பத்திரத்தைச் சமர்ப்பிக்காவிடத்து) தமது கடன் விபரங்களை, அதாவது கொடுத்த தொகை, திகதி மற்றும் தற்போதைய நிலுவை என்பவற்றையும் மேற்கண்டவாறு சமர்ப்பிக்க வேண்டும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சிலோன் ரீ ஹாடன்ஸ் லிமிட்டெட்.

2014.05.02.

**குறிப்பு**.- தேவை ஏற்படின் இக்கூட்டத்தில் கடன் கொடுத்தோரால் மேற்படி கம்பனியின் ஒடுக்குதலுக்கான கலைப்பாளர் ஒருவரை நியமிக்கவும் பரிசோதகர் குழுவொன்றை நியமிக்கவும் முடியும்.

5-526

---

# ஏல விற்பனைகள்

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும்கீழ் விற்பனை அறிவித்தல்*

கடன் தொடர்பு இல. 73279151 மற்றும் 72974473

லக்ஷ்மி பவான் பாமசி ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை

இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2014.03.28 ஆந் திகதிய 1856 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2014.03.17 ஆந் திகதிய ''டெய்லி நியூஸ்'', ''தினகரன்'', ''தினமின'' ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன்கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த ரீ அன்ட் எச் ஏலத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்ன அவர்கள் 2014.05.31 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### முதலாவது அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தில் கொழும்பு மாகர சபை எல்லைகளுள் சல்பிட்டி கோரளையில் பல்லேபற்றுவில், வெள்ளவத்தை வடக்கு கிராம உத்தி யோகத்தர் பிரிவில் வெள்ளவத்தை வடக்கு வட்டாரம், இல. 43 இல் வெள்ளவத்தையில் அமைந்த டபிள்யூ. ஏ. சில்வா மாவத்தை, வரிமதிப்பீட்டிலக்கம் இல. 83/3 மற்றும் 83/4 ஐக் கொண்ட ''கோங்கஹவத்த'' என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். ராசப்பா தயாரித்த 2007, மே 28 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 265/2007 இல் விபரித்த துண்டு 7627 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு : துண்டு P2 (1 ஆவது செபல் லேன் வரிமதிப்பீட்டிலக்கம் 30) மற்றும் 21A இன் துண்டு Q உம் ; கிழக்கு : 21 இன் துண்டு B2 உம் (டபிள்யூ. ஏ. சில்வா மாவத்தை வரிமதிப்பீட்டிலக்கம் 83/6 மற்றும் 21 இன் (ரோட்) துண்டு B9 உம் ; தெற்கு : 21 இன் (ரோட்) துண்டு B9 மற்றும் (டபிள்யூ. ஏ. சில்வா மாவத்தை வரிமதிப்பீட்டிலக்கம் 83/1) துண்டு 1129 உம் ; மேற்கு : துண்டுகள் 2959 மற்றும் 2988 (டபிள்யூ. ஏ. சில்வா மாவத்தை வரிமதிப்பீட்டிலக்கம் 83/5) எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 265/2007 இன்படி பதினைந்து தசம் நான்கு ஐந்து பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 15.45பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது கொழும்பு காணிப்பதிவகத்தில் SPE 5/62 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட துண்டு 7627 கீழே விபரித்தவாறு மீளளவை செய்யப்பட்டுள்ளது:-

மேற்குறிப்பிட்டவாறு வெள்ளவத்தை கிராமத்தில் அமைந்த டபிள்யூ. ஏ. சில்வா மாவத்தை, வரிமதிப்பீட்டிலக்கம் இல. 83/3 மற்றும் 83/4 ஐக் கொண்ட ''கோங்கஹவத்த'' என அழைக்கப்படும் காணி வெள்ளவத்தை, பதிவு வரைபடம் இல. 2 இல் பி1 இன் துண்டு 21 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு : துண்டு 21A இன் துண்டு P2 உம் மற்றும் 21A இன் துண்டு Q உம் ; கிழக்கு : 21 இன் துண்டு B2 உம் 21 இன் துண்டு B9 உம் ; தெற்கு : 21 இன் (ரோட்) துண்டு B3 உம் மற்றும் ; மேற்கு : 21 இன் துண்டு A உம் எல்லைகளாக் கொண்டு மேற்குறிப்பிட்ட பதிவு வரைபடத்தின்படி பதினைந்து தசம் மூன்று சைபர் பேர்சுக்கள் (0ஏ. 0றூ. 15.30பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது கொழும்பு காணிப்பதிவகத்தில் வெள் 87/83, 84 இல் பதிவு செய்யப்பட்டது.

### இரண்டாவது அட்டவணை

மேற்குறிப்பிட்டவாறு வெள்ளவத்தை கிராமத்தில் அமைந்த ''கோங்கஹ வத்த'' என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். முருகபிள்ளை தயாரித்த 1965, டிசெம்பர் 5 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 176 இல் 21 இன் துண்டு B9 (பாதைக்கு ஒதுக்கப்பட்டது) என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு : வரைபடம் இல. 176 இல் துண்டுகள் 21 இன் B1 உம் 21 இன் B2 உம் ; கிழக்கு : வரைபடம் இல. 176 இல் 21 இன் துண்டு B6 உம் 21 இன் B7 மற்றும் 21 இன் B8 உம் ; தெற்கு : பெருந்தெருவும் (தற்போது டபிள்யூ. ஏ. சில்வா மாவத்தை) ; மேற்கு : வரைபடம் இல. 176 இல் துண்டுகள் 21 இன் பி5, 21 இன் பி4 மற்றும் 21 இன் பி3 உம் எல்லை

களாக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 176 இன் படி பதின்மூன்று தசம் ஏழு ஐந்து பேர்ச்சு (0ஏ. 0றூ. 13.75பே.) விஸ்தீரணமுடையதாகும். இது கொழும்பு காணிப் பதிவகத்தில் SPE 5/ 64 இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர் சபை கட்டளைப்படி

பீ. டி. ஆர். மஹானாம,
பிரதான முகாமையாளர்.

இலங்கை வங்கி,
தெஹிவளை,
2014, ஏப்பிறல் 28.

5-511

---

## கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ – ஜா-எல கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் பீகியூ 116) மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்-

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரல தாசியபத்து கட்டுநாயக்க-சீதுவ நகரசபை எல்லையில் அம்மண்தொலுவ கிராமத்தில் அமைந்துள்ள எட்டம்பகாவத்த என்ற காணிக்கு நிலஅளவையாளர் எம். டி. எட்வர்ட் 2007.04.16 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 4272 இல் காண்பிக்கப்பட்ட பகுதிபடுத்திய லொட் 11, இக்காணியில் அமைந்துள்ள எல்லாம் சேர்த்து**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 10பே.)**

மேற்சொல்லப்பட்ட காணியை என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் 2014, யூன் மாதம் 09 ஆந் திகதி (09.06.2014) மு. ப. 10.30 மணிக்கு விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2014.01.10 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் ''லக்பிம'', ''த ஐலண்ட்'' மற்றும் ''வீரகேசரி'' பத்திரிகைகளையும் ஏலவிற்பனை விளம்பரத் திற்காக 2014.05.16 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2014.05.19 ஆந் திகதிய "லக்பிம", "த ஐலண்ட்" மற்றும் "வீரகேசரி" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணிக்குச் செல்லும் விதம்.**- கொழும்பில் இருந்து (களனி பாலம்) மேலாக நீர்கொழும்பு பிரதான றோட்டில் (ஏ3) 21 கிலோ மீற்றர் சீதுவ வரை சென்று அதன் பிறகு வலது பக்கம் உள்ள கொட்டுகொட றோட்டில் (ரத்தொலுகம செல்லும் பிரதான றோட்) 1.5 கிலோ மீற்றர் சீதுவ பல்லிய சந்திக்குச் சென்று இடது பக்கம் திரும்பி பேஸ்லைன் றோட்டில் (அம்மணதொலுவ றோட்) 1.3 கிலோ மீற்றர் அம்மணதொலுவ சென்று வலது பக்கம் திரும்பி அலுத்யேண றோட்டில் (நகரசபை தார் றோட்) 350 மீற்றர் சென்று தொட்டுபொல றோட்டில் (தார் இடப்பட்ட நகரசபை றோட்) 150 மீற்றர் சென்று ரண் ஹோம்ஸ் வீட்டுத் திட்டம் காணமுடியும். லொட் 11-இரண்டாவது துண்டு தொட்டுபொல றோட்டில் இருந்து 20 அடி பாதை றோட் உள்ளது.

**கொடுப்பனவு செலுத்தும் விதம்.**- உத்தேச கொள்வன வாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;
(4) நொத்தாரிசு கட்டணம் 2,000 ரூபா ;
(5) இலிகிதர் கட்டணம் 500 ரூபா ;
(6) ஏலத்திற்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;

மிகுதி 90% ஏலத்திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பிரதான அலுவலகம் அல்லது ஜா-எல கிளையில் செலுத்த வேண்டும்.

வேறு விபரங்களுக்காக.- முகாமையாளர், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இல. 140, நீர்கொழும்பு றோட், ஜா-எல. தொலைபேசி இல. : 2243614-5 ; தொலைநகல் இல. : 2243613.

எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 182, 3 ஆவது மாடி, புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி/பக்ஸ் 011- 2445393.

5-502

---

## மக்கள் வங்கி - (விசேட சொத்துக்கள் பிரிவு)

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி ஆம் பிரிவின் கீழான விற்பனை

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளே, பள்ளேபத்து, கோட்டே நகரசபை எல்லைகளுக்குட்பட்ட பாகொட, நாகவிகாரை வீதியில் அமைந்துள்ள தெல்கஹகுருந்துவத்த என அழைக்கப்படும், உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஐ. டபிள்யூ. டபிள்யூ. இந்ததிஸ்ஸ அவர்களால் வரையப்பட்ட 1967 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 08 ஆந் திகதிய, 2665 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு எப்3 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு, அங்குள்ள 5/29 ஆம் இலக்க வீட்டுடன் மண், மரங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் அடங்கியது மற்றும் மேலே கூறப்பட்ட 665 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைய, கொழும்பு காணிப்பதிவகத்தினால் எம்878/300பி என்ற இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 20பே.)**

(கொழும்பு 11, கேஸ்பஹ வீதி, பீப்பள்ஸ் பார்க் கட்டிடம், யூஜீ 125 என்ற இலக்கத்தில் அமைந்துள்ள குறித்த சொத்தானது, வரையறுக்கப்பட்ட எட்வின் இம்போர்ட்ஸ் அன்ட் இன்டஸ்ட்ரீஸ் (தனியார்) நிறுவனம் மற்றும் எட்வின் புக் இன்டஸ்ட்ரீஸ் எனும் பெயரில் தனியுரிமைத்துவத்துடன் வியாபாரத்தை நடாத்திச் நடத்திச்செல்லும் முகதம் வசம் எட்வின் செனவிரத்ன அவர்களால் மக்கள் வங்கியில் அடகுவைக்கப்பட்டது.)

*மக்கள் வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை மு. ப. 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.*

***தீர்மான அறிவித்தலுக்கு.***- *தீர்மான அறிவித்தலுக்கு தயவுசெய்து 2002, நவெம்பர் மாதம் 1 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியையும் 2002, ஒற்றோபர் 19 ஆந் திகதிய "தினமின" பத்திரிகையையும் 2002, ஒற்றோபர் 11, 16 ஆந் திகதிகளில் வெளிவந்த "சிலோன் டெயிலி நியூஸ்" மற்றும் 2002, ஒற்றோபர் 16 ஆந் திகதிய "தினகரன்" ஆகிய செய்திப் பத்திரிகைகளைப் பார்வையிடவும்.*

***கொடுப்பனவு செய்யும் முறை.***- *ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை காசாக முழுமையாகச் செலுத்த வேண்டும் :-*

*(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;*
*(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி, விற்பனை விலையில் 1% (ஒரு சதவீதம்) ;*
*(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;*
*(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் 500 ரூபா ;*
*(5) விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அவையும் ;*
*(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி.*

*கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு சதவீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் கொழும்பு 2, ஸ்ரீ சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை, 75 ஆம் இலக்கத்திலுள்ள மக்கள் தலைமை அலுவலக முதலாம் மாடியில் அமைந்துள்ள விசேட சொத்துக்கள் பிரிவு-அறவீடுகள், பிரதம கணக்காளரிடம் செலுத்தப்பட வேண்டும். தொலைபேசி இல. : 011-2431033 அல்லது 011-2481569 ; தொலைநகல் இல. : 011-2431033.*

*மேற்கூறப்பட்ட தொகை குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10 வீதத்தைப் பறிமுதல் செய்வதற்கும், உடைமையை மீள விற்பனை செய்வதற்குமான உரிமை வங்கிக்கு உண்டு.*

*காணி உறுதியின் பிரதிகளையும், ஏனைய விபரங்களையும் மேற்கூறப்பட்ட விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

*முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது.*

*சொக்மன் அன்ட் சமரவிக்ரம,*
*ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்,*
*122 வருடகால மகோன்னத சேவை.*

| *தலைமை அலுவலகம் :* | *நகர அலுவலகமும் காட்சியறையும் :* |
|---|---|
| *24, டொரிங்டன் வீதி, கண்டி.* | *290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5.* |
| *தொலைபேசி : 081-2227593* | *தொலைபேசி : 011-2502680 011-2585408* |
| *தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371* | *தொ.பே./ஃபக்ஸ் : 011-2588176* |
| மின்னஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்னஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.sandslanka.com

*5-517*

---

**ஹட்டன் நஷனல் வங்கி ப.வ.க. – மாத்தளை கிளை**

*(முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி என அறியப்பட்டது)*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

***பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு (மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், மாத்தளை தெற்கு, தம்புள்ளை பிரதேச செயலாளர் பிரிவு, வகபனஹ பள்ளேசிய பற்று, தமுலுஓய என்ற திட்டவெல்கொல்ல கிராமத்தில் அமைந்துள்ளதும் தற்போது "விஜேசிறிவத்தை" என அறியப்படுகின்ற "வம்பட்டுயாய, பளுகஹ யாய, பளுகந்தயாய, கலயாய மற்றும் கொஸ்வத்தேமுல்லேகும்புற" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. எம். அனுரரத்ன அவர்களால் தயாரிக்கப்பட்டு 2000, சனவரி 31 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 670 இல் குறிப்பிடப்பட்டு துண்டு இல. 1 என அடையாளமிடப்பட்டதுமான காணியினது) அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து ஏல விற்பனை***

***(காணியின் விஸ்தீரணம்: 0ஏ. 2றூ. 25பே.)***

*(கடப்பாடுடையவரான ஷமிந்த ஜனக்க தம்போவிலவிற்கு அளிக்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹற்றன் நஷனல் வங்கி ப.வ.க. இற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள ஆதனம்)*

**ஆதனத்திற்கு செல்லும் பாதை.**- தம்புள்ளை நகரிலிருந்து மாத்தளை வீதி வழியே களுன்தெவ சந்திவரை ஏறக்குறைய 7 கிலோ மீற்றர் சென்று, இடப்பக்கம் திரும்பி, களுன்தெவ வீதி வழியே இதே வீதியை எல்லையாகக் கொண்டு வலப்பக்கத்தில் அமைந்துள்ள விற்பனைக்குரிய இவ்வாதனத்தை அடைவதற்கு ஏறக்குறைய 500 மீற்றர் செல்லப்படும்.

மேலே விவரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை 2014, யூன் 18 ஆந் திகதி, திங்கட்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் நாம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வோம்.

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.***- *2013, நவெம்பர் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியையும் 2014, மார்ச்சு 18 ஆந் திகதிய "லக்பிம", "தினகரன்" மற்றும் "டெய்லி மிரர்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்முதல் விலையில் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய உள்ளூர் அதிகார சபை வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் மீது 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் 500 ரூபா ;
(5) விற்பனை செலவு மற்றும் வேறேதேனும் கட்டணங்கள் (எவையேனும் இருப்பின்) ;
(6) விற்பனை சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். இலங்கை அரசினால் அல்லது வேறேதேனும் அதிகார சபையினால் அமுலாக்கப்பட்டு எப்போதும் ஏற்புடைத்தான கட்டணங்கள், வரிகள், வரிக்கட்டணங்கள் அல்லது வேறேதேனும் வரிகள் ஆகியவற்றுடன்

சேர்த்து கொள்வனவு விலையின் மிகுதி 90% யை வங்கிக்கு செலுத்த வேண்டும்.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆதனங்களையும் "கொழும்பு 10, டீ. பீ. ஜயா மாவத்தை, இல. 479, ஹற்றன் நஷனல் வங்கி ப. வ. க உதவிப் பொது முகாமையாளர், அறவீடுகள்", அவர்களிடம் பார்வையிட முடியும். தொலைபேசி இல. : 011-2661816, தொலைநகல் இல.: 011-2661835.

டல்லாஸ் கெலாட்ஸ்,
உத்தரவுபெற்ற ஏலதாரர்.

இல. 146/3, கல்தேரா கார்டின்ஸ்,
துட்டுகெமுனு தெருவிற்கப்பால்,
கொஹுவளை.
தொலைபேசி இல. : 011-4302622, 011-24302623.
தொலைநகல் இல. : 011- 2856013.

5-519

---

**ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ – கம்பஹா கிளை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை

**மிகவும் பெறுமதிமிக்க வசிப்பிடத்துக்குப் பொருத்தமான சொத்து ஏல விற்பனை**

**கம்பஹா மாநகர சபை எல்லைக்குட்பட்ட அலுத்கம கிராமத்தில் அமைந்துள்ள பண்டாரவத்த தோட்டம் எனும் காணி உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ஸ்ரீ டீ. லியனசூரிய என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1983.04.21 ஆந் திகதிய 2763 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 43 எனும் காணித்துண்டும் அதனுள்ளடங்கும் இசுறு மாவத்தையில் வரிப்பண இல. 60/8 எனும் சொத்தும் மற்றும் சகலதுமாகும்.**

**(பரப்பளவு : 18 பேர்ச்சஸ்)**

**கம்பஹா மாநகர சபை எல்லைக்குட்பட்ட மெதகம கிராமத்தில் அமைந்துள்ள பண்டாரவத்த எனும் காணி உரிமம்பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஏ. யூ. செனரத் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2005.04.11 ஆந் திகதிய 2890 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 1 எனும் காணித்துண்டும் அதனுள்ளடங்கும் பெரகும் மாவத்தையில் வரிப்பண இல. 180 எனும் சொத்தும் மற்றும் சகலதுமாகும்.**

**(பரப்பளவு : 45.4 பேர்ச்)**

(இவ்வாதனம் வரையறுக்கப்பட்ட எட்டோடெக் சிஸ்டம்ஸ் இன்ஜினியரிங் (தனியார்) கம்பனி கடப்பாடுடையதாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.)

**முதலாம் விற்பனை.**- இவ்வாதனம் 2014.06.23 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கும்,

**இரண்டாம் விற்பனை.**- இவ்வாதனம் 2014.06.23 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கும் அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2013.02.22 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2013.02.27 ஆந் திகதிய "லக்பிம", "தினகரன்" பத்திரிகைகளையும் 2013.03.17 ஆந் திகதிய "டெயிலி மிரர்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ஏலவிற்பனை யாளரிடம் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்முதல் விலையில் 10வீதம் (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) விற்பனை வரி ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் 2 1/2 வீதம் (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 500 ரூபா ;
(6) விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணம் 2,000 ரூபா.

கொள்முதலில் மிகுதி 90 வீதமும் இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாவது செலுத்தப்பட விருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- சிரேஷ்ட முகாமையாளர் (அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10 உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2661835, 011-2661836, 011-2661826.

ஐ. டப்ளியூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை, மாவில்மட,
கண்டி.
தொலைபேசி இல. : 071-4755974, 071-8446374, 077-7761706.
தொலைநகல் இல. : 081-2210595.

5-508

---

**ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ – கம்பஹா கிளை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை

**வசிப்பிடத்திற்குப் பொருத்தமான சொத்து ஏல விற்பனை**

**கம்பஹா மாநகர சபை யக்கல உப அலுவலக எல்லைக்குட்பட்ட கம்பஹா இந்திகொல்ல பாதையில் அமைந்துள்ள இந்திகொல்ல**

***எஸ்ட்டேட் எனும் காணி உரிமம்பெற்ற நிலஅளவையாளர் டபிள்யு. என். நிகால் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2006.12.12 ஆந் திகதிய 1807 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட லொட் 1 எனும் காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்களும் மற்றும் சகலதுமாகும்.***

***(பரப்பளவு : 48 பேர்ச்)***

*(இவ்வாதனம் வரையறுக்கப்பட்ட எட்டோடெக் சிஸ்ரம்ஸ் இன்ஜினியரிங் (தனியார்) கம்பனி கடப்பாடுடையதாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.)*

**ஆதனத்தை வந்தடைதல்.**- கம்பஹா நகரத்திலிருந்து யக்கல பிரதான பாதையில் சுமார் 2 கிலோ மீற்றர் தூரம் இந்திகொல்ல சந்திவரை வந்து இடது பக்கம் திரும்பி ஆலயப் பாதையில் சுமார் 700 மீற்றர் தூரம் ஆலயம் வரை சென்று மீண்டும் இடது பக்கம் திரும்பி சந்திக்கும் மணற்பாதை இறுதிவரை சென்றதும் இவ்வாதனம் அமைந்துள்ளது.

இவ்வாதனம் 2014.06.23 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.***- 2013.02.22 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2013.02.27 ஆந் திகதிய ''லக்பிம'', ''தினகரன்'' பத்திரிகைகளையும், 2013.02.28 ஆந் திகதிய ''டெயிலி மிரர்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ஏலவிற்பனை யாளரிடம் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்முதல் விலையில் 10வீதம் (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) விற்பனை வரி ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் 2 1/2 வீதம் (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 500 ரூபா ;
(6) விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணம் 2,000 ரூபா.

கொள்முதலில் மிகுதி 90 வீதமும் இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட விருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- சிரேஷ்ட முகாமையாளர், (கடன் அறவிடுதல்) ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10 உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2661835, 011-2661826, 011-2661836.

ஐ. டப்ளியு. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை, மாவில்மட,
கண்டி.
தொலைபேசி இல. : 081-2210595, 071-4755974, 071-8446374, 077-7761706.

5-507

## செலான் வங்கி பீஎல்சீ – கொழும்பு கோட்டைக் கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**காணி ஏல விற்பனை**

*''கடன்பட்டோர்'' என்ற வகையில் இரத்மலானை பதிவு அலுவலகத்தில் (முன்னர் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ், பதிவு இல. என்(பி.வீ.எஸ்.) 12606) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கத்தைக் கொண்டுள்ள சட்டத்தின்கீழ் பதிவு இல. பீவீ 2326 ஐக் கொண்டுள்ள, ஒழுங்காகக் கூட்டிணைக்கப்பட்டுள்ள ஒரு கம்பனியாகிய 'ட மாஸ்டர்ஸ் சிலோன் (பிறைவேட்) லிமிட்டெட்டிற்கு வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக செலான் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.*

***மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், சல்பிட்டி கோரள, பல்லேபத்துவில் டெலவல கிராமத்தில் வரிமதிப்பீட்டு இல. 16, திஸ்ஸ மாவத்தையில் அமைந்துள்ள கட்டிடத்துடனான ''லேடி கத்தரீன் குரூப்'' என்றழைக்கப்படுகின்ற காணித்துண்டு 75 உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். அம்பலவாணர் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1956.06.15 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 111 இல் குறிப்பிடப்பட்ட துண்டு 75 சகலதும் பிரிக்கப்பட்டு இருபத்திரண்டு தசம் ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 22.5பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.***

***மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், சல்பிட்டி கோரள, பல்லேபத்துவில் டெலவல கிராமத்தில் வரிமதிப்பீட்டு இல. 16, திஸ்ஸ மாவத்தையில் அமைந்துள்ள கட்டிடத்துடனான ''லேடி கத்தரீன் குரூப்'' என்றழைக்கப்படுகின்ற காணித்துண்டு 69பி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். அம்பலவாணர் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1956.06.15 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 111 இல் குறிப்பிடப்பட்ட துண்டு 69பி சகலதும் பிரிக்கப்பட்டு இருபது பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 20பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.***

***வழி : வீதி உரிமை அதன் மேலாகவும் அதனூடாகவும் பின்வருமாறு :-***

***மேற்கூறப்பட்ட டெலவல கிராமத்தில் அமைந்துள்ள ''லேடி கத்தரீன் குரூப்'' என்றழைக்கப்படுகின்ற காணித்துண்டு 74 (வீதிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது) உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். அம்பலவாணர் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1956.06.15 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 111 இல் குறிப்பிடப்பட்ட துண்டு 74 சகலதும் பிரிக்கப்பட்டு இரண்டு றூட் மற்றும் முப்பத்தெட்டு பேர்ச்சஸ் (0ஏ. 2றூ. 38பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.***

மேலே விபரிக்கப்பட்ட சொத்தைப் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் அதே இடத்தில் 2014, யூன் 5 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்.**- கொழும்பு கோட்டையிலிருந்து இரத்மலானை வரை காலி வீதி மார்க்கமாக செல்கையில் காலி வீதியில் பொருபன சந்தி வரை சென்று, பின் இடதுபக்கமாக உள்ள பொருபன வீதியால் திரும்பி 1.2 கி. மீ. தூரத்தில் உள்ள திஸ்ஸ

மாவத்தையால் 100 மீற்றர் சென்றால் குறிக்கப்பட்ட சொத்தை அடையலாம்.

**தீர்மான அறிவித்தலுக்கு**.- 2014.03.07 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2014.02.24 ஆந் திகதிய ''டெயிலி மிரர்'', "லங்காதீப" பத்திரிகைகளையும் 2014.02.19 ஆந் திகதிய "தினக்குரல்" பத்திரிகையையும் பார்வையிடவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்**.- வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%), (2) உள்ளூர் அதிகார சபைக்கான உள்ளூர் விற்பனை வரி அத்துடன் உள்ளூர் அதிகார சபைக்கு உள்ளூர் விற்பனை வரி ஒரு வீதம் (1%) அரசினால் அல்லது உள்ளூர் அதிகார சபையினால் விதிக்கப்பட்ட வேறு ஏனைய விற்பனை, (3) ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2 %), (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் 2,000 ரூபா, (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் 500 ரூபா, (6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சீ. இல் வைப்புச் செய்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதித் தொகை 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யப்படாவிடில் முன்வைப்புச் செய்த தொகையில் 10% கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய வங்கி முழு உரித்துடையது.

காணி உறுதி ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை "கொழும்பு 3, காலி வீதி, இல. 90, 'செலான் வங்கி பீஎல்சீ, பிரத்தியேக முகாமையாளர் (சட்டம்) இடமிருந்து பெற்றுக்கொள்ளவும் பார்வையிடவும் முடியும். தொலைபேசி இல. : 2456479, 2456482.

துசித கருணாரத்ன (ச. நீ.),
உத்தரவுபெற்ற ஏலதாரர் மற்றும்
நீதிமன்ற ஆணையாளர்.

ரி. அன்ட் எச். ஒக்சன்,
இல. : 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவை.
தொலைபேசி : 011-3068185, 2572940.

5-506